முருகப்பெருமான் துணை

**மகான் பேயாழ்வார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.01.2022, செவ்வாய்கிழமை

1. ஆறுமுகனார் மகா சக்தியே
   அறமாக வந்த தரும சக்தியே
   ஏறுமுகம் உலகோர் அடைய
   ஏழாம்படை வீடுபடைத்த ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
   ஞாலமதில் உன் பெருமை கூறி
   இனிமைபட பிலவ கலை திங்கள்
   இயம்பிட பஞ்ச திகதி குசன் வாரம்
   (பிலவ வருடம் தை மாதம் 5ம் நாள், 18.01.2022 செவ்வாய்கிழமை)
3. வாரமதில் துல்லிய ஆசிதனை
   வழங்குவேன் பேயாழ்வார் யானும்
   சோரமிலா ஞானவான் கொண்ட
   சுத்தநெறி வழி வரும் அன்பர்களை
4. அன்பர்களை உலகமெங்கும் பெருக்கி
   அகிலமாற்றம் நிகழ உரைப்பேன்
   துன்பமான கலியின் தீகுணங்களை
   தீட்சை வழி அரங்கன் கரம்பட
5. கரம்பட உலக மக்களுக்கு
   கந்தவேலன் சுத்தம் செய்ய
   வரம்பெற கலிவாழ் மக்களே
   வணங்கி பிரணவக்குடில் நோக்கி
6. நோக்கி வருகை கண்டிட
   நிலமதனில் ஞானவான்களாக
   தேக்கமின்றி தேர்வு கண்டு
   தேசமாற்றம் செய்து சிறப்பர்
7. சிறப்பான தரும பலம் கூட்டும்
   சேவைதனை அரங்க ஞானி
   மறுப்பின்றி உலகம் எங்கும் செய்துவர
   மாதருமத்தை உலகோர் வரவேற்று
8. வரவேற்று கரம் நீட்டி தருமம்
   வளர பொருளுதவி செய்து
   அரங்கா முருகா எனும் பூசை
   அனுதினமும் செபதபமாகச் செய்து
9. செய்து ஞானிகளை வணங்க
   செவ்வடிவேலன் அருள் பலமாக
   மெய் ஞானம் விளங்கி கலியுகமக்கள்
   மேன்மையும் திடமும் கண்டடைவர்

10. அடையவே உலகமதில் இனி
ஆளும் மக்கள் தலைமையும்
தடைஇன்றி ஆறுமுகன் ஆசிபெற்ற
தனித்துவம் மிக்க ஆளுமையாகி
11. ஆகியே உலகமாற்றம் தானும்
அறிவிப்பேன் ஞான ஆட்சியாக
மகிழவே ஞானசித்தர் காலமாக அடையும்
மொழிந்திட்ட துல்லிய ஆசி முற்றே

–சுபம்–